Dr. H. V. HANDE: Last year we were told that the Government was not directly participating in this Fair and a private organisation has been given charge of the whole affair. I wish to know whether the Government of Madras is directly participating in this Fair. If the Government of Madras is in charge of this Fair, may I know the amount of work turned out so far?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கண்காட்சியை ஆல் இந்தியா மானுபாக்சரேர்ஸ் ஆர்கனேசேஷன் ஏற்றுக்கொண்டிருக்கின்ற முயற்சிக்கு இந்திய அரசும், தமிழக அரசும் உதவி செய்கிறது. சென்னை மாநகராட்சி சாலைகள் போடுதல் விளக்கொளி கொடுத்தல், போன்றவற்றை அந்தக் கண்காட்சிக்கு செல்லுகிற இடம் வரையிலும் செய்து வருகிறது. ஹவுசிங் போர்டாரால், வேறு பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு திட்டங்கள் அதாவது சாலைகள் போடுதல், ஒளிவிளக்கேற்றுதல், கழிவுநீர் ஓட்டம் போன்றவைகளை ஹவுசிங் போர்ட் செய்து வருகிறது. தமிழக அரசு, ஹவுசிங் போர்ட், சென்னை மாநகராட்சி ஆகிய இவையனைத்தும் இதிலே ஈடுபட்டிருக்கின்றன. இதில் இந்திய அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவருகிறது. இதற்காக ஒரு ஹை பவர் கமிட்டி, தலைமைச் செயலாளரை தலைவராகப் போட்டு மற்ற முக்கியமான 4, 5 இலாக்கா செயலாளர்களையும் போட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: இந்தக் கண்காட்சி வெறும் கண்காட்சியாக இல்லாமல் வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களை எல்லாம் இங்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த முயற்சியையும் இந்திய அரசுதான் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதைப்பற்றி ஒரு சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பொருள் கொண்டுவந்தாலும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள் பல இருக்கின்றன. அந்தப் பொருள்களை அனுமதிக்கமுடியுமா என்று இந்திய அரசு கவனிக்க வேண்டும். இறக்குமதிப் பொருள்களைப் பற்றி இந்திய அரசுதான் கவனிக்கவேண்டும்.

திரு. கி. ஜயராமன்: பொருட்காட்சி நிர்வாகக்குழுவின் தலைவர், செயலாளர்களின் பெயர்கள் என்ன? எந்த அரசாங்கம் நியமித்தது? அவர்கள் எந்தத் தகுதியினால் நியமிக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடு யன்: ஆல் இண்டியா மானுபாக்சரர்ஸ் ஆர்கனேசேஷன்தான் இதை நடத்துகிறது என்று சொன்னேன். அதனுடைய தலைவர்தான் ற்கும் தலைவராக இருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

அற நிலையங்கள்

*349 வினு—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** மதிப்பிற்குரிய கல்விதொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அற நிலையச் சட்டம் 74-ம் பிரிவின்படி நோட்டிபிகேஷன் செய்யப்பட்ட அற நிலையங்கள் எத்தனை?

(இ) எல்லாவற்றிற்கும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐந்து அற நிலையங்கள்.

(இ) நான்கு அறநிலையங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஐந்தாவது அறநிலையத்திற்கும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, ஒரு கோவிலின் பொறுப்பை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குக் கொடுத்து, இன்னும் 50 மைலுக்கு அப்பாலுள்ள ஒன்றிரண்டு கோவில்களுக்கும் பொறுப்பு கொடுப்பதால், ஊழல்களும், சிக்கல்களும் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க இந்த முறையை மாற்ற சர்க்கார் விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்து யோசனையில் எடுக்கப்படும். கேட்ட கேள்வி ஐந்து கோவில்கள் பற்றியது. அதில் நான்கு கோவில்களுக்கு நியமனம் ஆகிவிட்டது. ஐந்தாவது கோவிலுக்கு ஏற்பாடு செய்யப்படு கிறது என்று தெரிவித்தேன்.

*350 வினு—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மாயூரம் தாலூக்காவிலுள்ள தருமபுரம் மடம், நாகப்பட்டினம் தாலூக்கா சிக்கல், நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம் இவைகளுக்கான சொத்துப் பதிவேடுகள் 1959-ம் வருடத்திய அறநிலையச் சட்டங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நாகப்பட்டினம் தாலூகாவில் சிக்கலிலுள்ள நவநீதேஸ்வரர் தேவஸ்தானம் சம்பந்தமான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஒப்புதல் பெற்றது. தரும புரத்தில் உள்ள தருமபுரம் மடத்தைப் பொறுத்தவரையில், அதன் சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனுல் அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சொத்துக்களின் விவரங் கள் என்ன? ஏன் ஒப்புதல் பெறவில்லை ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தர்மபுரம் ரெஜிஸ்டர் அந்த ஆதீனத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அளிக்கவேண்டும் என்று துணை கமிஷனர் உத்தரவு போட்டிருக்கி ருர்கள். விரைவில் அதைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

சுவர்ணபுரீஸ்வரர் கோயில், சித்தாய்மூர்

*351 வினு—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூக்கா, சித்தாய்மூர் சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத் தில் நிர்வாக அலுவலர் ஏராளமான நகைகளைக் கையாடல் செய்ததாக 1966-ஆம் ஆண்டில் மேற்படி கிராம மக்களிடமிருந்து வந்த புகாரின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த ஆலய நிர்வாக அதிகாரிக்கெதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குற்றங்களுக் கான விசாரணை முடிவடையும் வரை அவர் தற்காலிகமாய் வேலையிலிரு ந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சென்ற ஆட்சியில் அவர் களுக்கு நெருங்கியவர் என்ற காரணத்தால், குற்றம் கண்டு பிடிக்கப் பட்டும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது அப்படி மிஸப்ரோப்ரியேஷன் செய்த சொத் துக்களை ரெகவர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர் மேல் கிரி மினல் வழக்குத் தொடர எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?